REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 25உ சனி (7—4—56) ★ ★ வெளியூர்: பங்குனி 26உ ஞாயிறு (8—4—56) [இதழ் 253

சைக்கிள் வரி ரத்து: சர்க்கார் சம்மதிக்காதாம்

சைக்கிள் வரியை ரத்து செய்துவிடுவது என்ற சென்னை நகரசபையின் முடிவை சர்க்கார் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

நகரசபையின் தற்போதைய நிதி நிலையை எண்ணிப் பார்க்கும்போது, ஆண்டொன்றுக்குக் கிடைக்கக்கூடிய ரூ. 2 இலட்சம் வருமானத்தை இழந்துவிடுவதென்பது முடியாத ஒன்றாகும். சைக்கிள் வரி விதிப்பை ரத்து செய்வதினால் ஏற்படுகிற நஷ்டத்திற்கு ஈடு செய்யும் வகையில் வேறு ஏதாவது வழி கூறினாலன்றி நகரசபையின் முடிவை ஏற்பதிற்கில்லை என்றும் சர்க்கார் கருதுகிறதாம்.

இந்தியக் கலாசாரத்தின் உண்மை உருவம்-உகாந்தா உரிமைப் போரில் உருக்காட்டுகிறது!

மக்களின் விடுதலை வேட்கையை ஒடுக்க பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் சரசசல்லாபம்

பிழைக்கச் சென்ற வட இந்திய வியாபாரிகளின் ஐந்தாம் படை வேலை அம்பலம்!

நல்லெண்ணத் தூதுக் குழுத் தலைவர் வெட்டவெளிச்சமாக்குகிறார்!

இந்தியத் துணைக்கண்டத்தில் ஆதிக்கம் செலுத்தியதுபோலவே உலகின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் இன்னும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அவர்களது ஆதிக்கப் பிடிப்பில் சிக்கி அடிமைப்பட்டு அவதியுறும் பல்வேறு காலனிகளுள் உகாந்தாவும் ஒன்று.

அந்த உகாந்தாவில், இந்தியாவிலிருந்து குடியேறி வாணிபம் நடத்தி, பிழைப்பு நடத்திவரும் வடநாட்டு வியாபாரிகள், அங்குள்ள மக்களின் நலன்களில் அக்கரை கொண்டவர்களாக இருக்க வேண்டுவதே நியாயம். ஆனால், இந்த வடநாட்டு வியாபாரிகள் அந்த நாட்டு மக்களிடத்தில் தங்களுக்குள்ள பொருளாதாரப் பிடிப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, உகாந்தா மக்களை அடிமை கொண்டுள்ள வெள்ளையருடன் சேர்ந்துகொண்டு, உகாந்தா மக்களின் விடுதலைப் போருக்கு துரோகமிழைக்கிறார்கள் என்பது, இந்தியாவின் பெரிய மனிதர்களுக்கு வெட்கந் தரக்கூடிய செய்தியாகும்.

உகாந்தாவிலிருந்து இந்தியா வந்துள்ள நல்லெண்ணத் தூதுக் குழுவின் தலைவரான டாக்டர் ஏ. எம். கே. முவாஜி என்பவர், வடநாட்டு வியாபாரிகளின் துரோகத்தை—ஈனச் செயலை அம்பலப்படுத்தியுள்ளார்.

பம்பாய் பத்திரிகையாளர் சம்மேளனத்தில் பேசும் போது அவர் குறிப்பிட்டதாவது :—

"உகாந்தாவில் குடியேறியுள்ள இந்தியர்கள் (அத்தனை பேரும் வடநாட்டு வியாபாரிகள்) உகாந்தாவில் வாழும் ஆப்பிரிக்கர்களின் விடுதலைப் போருக்கு ஆதரவு தராதது மட்டுமல்ல; பகிரங்கமாகவே ஆப்பிரிக்கர்களை ஒடுக்குவதில் பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டு செயல்பட்டனர்.

"இப்படிப் பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டு ஆப்பிரிக்கரை ஒடுக்க முனையும் இந்த 'இந்தியர்கள்', உகாந்தாவின் பொருளாதார, அரசியல் துறையில் தங்களுக்குள்ள பிடிப்பைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணுகிறார்கள்.

"இந்தியாவில் உள்ள பத்திரிகைகள், உகாந்தாவில் குடியேறியுள்ள இந்தியர்களின் இந்தப் போக்கைக் கண்டிப்பார்களேயானால் அது ஒரு பெரிய சேவையாகும்."

உகாந்தா மன்னரான கபாகா, நாடு கடத்தப்பட்டபோது, இந்த இந்தியர்கள் வெள்ளையர்களின் ஏகாதிபத்திய வெறிக்கு அரணாக நின்றார்களாம்! அந்த ஆப்பிரிக்கத் தலைவர் வேதனையோடு வெளியிட்டிருக்கிறார்.

பண்டித நேருவிடம் இது பற்றியெல்லாம் அவர் பேசினராம்; ஆனால், இந்த விபரங்கள் எல்லாம் தனக்குத் தெரியவே தெரியாது என்று நேரு கூறினாராம்.

இந்திய வியாபாரிகளின் இந்த ஈனத்தனத்தை சற்று ஆத்திரத்துடனேயே அந்த ஆப்பிரிக்கத் தலைவர் வெளியிட்டதாக பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

"எங்களது மதிப்பிற்குரிய விருந்தினர்களாக, இந்தியர்களை என்றும் ஏற்போம்; ஆனால், அதேபோது, அன்னியர் எவரும் எங்களது அரசியல் விவகாரங்களில் வாலாட்டுவதை சகிக்கமாட்டோம்,"

என்றும், டாக்டர் முவாஜி தெரிவித்திருக்கிறார்.

இந்தி பற்றி நேரு!

அலகாபாத், ஏப். 5—

"என்னுடைய வேலையாட்கள் இந்தி செய்தித் தாட்களைப் படித்துவிட்டு, என்னிடம் வந்து, தங்கட்கு எதுவுமே புரியவில்லை என்று கூறுகின்றனர். என்னுடைய கொள்கை எல்லாம், எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் இந்தி எளிய முறையில் எழுதப்பட வேண்டும் என்பதுதான். இப்போது உபயோகிக்கப்படும் இந்தியை விட 'சவமொழி' (சமஸ்கிருதம்) எளிதானதாகவும், சுலபமானதாகவும் உள்ளது,"

என்று, பண்டித நேரு, இங்கு கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

குடிநீருடன் சாக்கடை நீர் கலந்ததாம்!

"டில்லி மாநகரத்தில் காமாலை ஏற்பட்டதற்குக் காரணம் குடிநீருடன் சாக்கடை நீரும் கலந்ததுதான்"

என்று, சென்னை மேல் (சட்ட) சபையில் சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறியுள்ளார்.

தம்மம்பட்டித் தோழர்கள் வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்படுகிறது!

தம்மம்பட்டித் தோழர்கள் மீதுள்ள வழக்கு இரண்டு மூன்று முறை தள்ளி வைக்கப்பட்டது.

6—4—56 அன்று வழக்கு நடைபெற்றது.

25 தோழர்களில் ஒரு தோழர்கள் வராததால் வழக்கை மீண்டும் 11—4—56-ம் தேதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதி அவர்கள் அறிவித்தார்.

அன்றையத் தினம் எவர் வரத் தவறினும் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக உறுதி கூறியுள்ளார்.

11—4—56ல் நடைபெற இருக்கும் வழக்கிற்கு, வழக்கறிஞர் செட்டோ அவர்களை ஏற்பாடு செய்து, வழக்காட எண்ணியுள்ளனர் நம் தோழர்களும், மற்றத் தோழர்களும்.

6—4—56-ல் நடைபெற்ற வழக்கைக் கவனிப்பதற்காக கழகத் தோழர்களும், மற்றுமுள்ள பொது மக்களும் தி. மு. கழகச் செயலாளர் டி. எம். இரங்கசாமி, கே. என். மணி ஆகியோரும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

உண்மை உணருவோர் தொகை வளருகிறது!

வடவரின் வஞ்சனைக்குக் கண்டனம்

சென்னை மந்திரிசபைக்கு இடித்துரை

தொழில் திட்டங்களில் தென்னாட்டிற்கு வடவர் இழைத்த அநீதி!

காமராசர் முன்னிலையில் வர்த்தகக் கழகத் தலைவர் விளக்கம்!

தமிழகம்—திராவிடம், தொழில் துறையில் முன்னேறுவதற்கு வடநாட்டவர் பகிரங்கமாகத் தடை விதித்து வருவது குறித்துக் கண்டனம் எழுப்புவோர் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. கண்டனம் எழுப்புவோர் நாம் மட்டும் என்றநிலை இருந்தபோது 'இவர்கள் எப்போதுமே வடநாட்டவரை—அவர்கள் வடநாட்டவர் என்பதாலேயே கண்டிப்பவர்கள்' என்று கூறி, உண்மைக்குத் திரையிட்டு, வடவரின் ஏகாதிபத்திய வஞ்சனையை மூடிமறைத்திட எண்ணமிட்டோரும் உண்டு. ஆனால், இன்று, மறைக்கப்பட முடியாத அளவுக்கு உண்மை பலரது கண்களையும் உறுத்த ஆரம்பிக்கவே, உண்மையை இலைமறை காய்மறையாகக் கூடவின்றி, பாதுகாப்பான வார்த்தைகளை மட்டும் சிரமப்பட்டுத் தேடிப் பிடித்து அவற்றினூடே உண்மையைப் புதைத்து எடுத்துக் கூறிவருவதைக் காண்கிறோம்.

தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கும் தென்னாட்டின், அபிவிருத்தித் திட்டங்களுக்கு டெல்லிப் பெரிய மனிதர்கள் இழைத்து வரும் கொடூரமான அநீதி குறித்து, தென்னிந்திய வர்த்தகக் கழகத் தலைவரான எம். ஏ. சிதம்பரம் அவர்கள் முதன்மந்திரி காமராசர் முன்னிலையில், விளக்கி யிருக்கிறார்.

"சென்னை போன்ற தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கும் ஒரு மாநிலம் பெற வேண்டிய அளவு கவனிப்பை, அபிவிருத்தித் திட்டங்களின் தயாரிப்பாளர்களிடமிருந்து பெறாது போனது வருந்தத்தக்கதாகும்.

"அடிப்படை, கனரகத் தொழில்களில் சிலவேனும் தென்னாட்டில் துவங்கப்பட வேண்டுமென்பது நிர்ப்பந்தமான ஒன்றாகும்; ஏனெனில், அப்போதுதான், படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் நிலைமையைச் சமாளிக்கவும் முடியும்.

"கனரக மின்சார இயந்திர உற்பத்தித் தொழிற்சாலை போன்றவை சென்னை மாநிலத்தில் நிறுவப்படவேண்டும் என்று வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

"கப்பல் கட்டும் தொழிற்சாலைகள், இங்கு நிறுவப்பட வேண்டும் என்ற தங்கள் கோரிக்கையை சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்தவேண்டும்.

"தொழில்கள் துவங்காததற்கு, இங்கு நிலக்கரி கிடைக்கவில்லை என்பது ஒரு வாதமல்ல—(அது ஒரு நொண்டிச் சாக்கு); மேலும் சென்னையின் தொழில் வளர்ச்சி, நெய்வேலியில் நிலக்கரிகிடைக்கும் 'அதிருஷ்டத்தைப்' பொறுத்தது என்று கூறிவிட்டு வாளாவிருந்துவிடக் கூடாது.

"மூலப் பொருட்கள் இல்லையே எனக் கூறுவது சரியான விவாதமாகாது. ஜப்பான், பிரிட்டன் போன்றுள்ள நாடுகளும் முதன்முதலில் மூலப் பொருட்கள் இல்லாமல்தானிருந்தன; ஆனால், இன்று அவைகள் தொழில் துறையில் முன்னேறி இருக்கின்றன.

"திறமையான தேர்ச்சி பெற்றத் தொழிலாளர்கள் சென்னையில் ஏராளமாக இருக்கின்றனர். வார்ப்படக் குழாய்கள், பத்திரிகை அச்சடிக்கும் 'நியூஸ் பிரிண்ட்' காகிதம் போன்ற வேறு பல தொழில்களையும் துவக்குவதற்கு இங்கு வாய்ப்பு உண்டு.

"சில கனரகத் தொழில்களையாவது துவக்கும்படி இந்திய அரசினருக்கும், திட்டக் குழுவிற்கும் வற்புறுத்திச் சொல்லுமபடி சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்"

என்று தோழர் எம். ஏ. சிதம்பரம், காமராசர் முன்னிலையில், தென்னிந்திய வர்த்தகக் கழகத்தின் 46-வது ஆண்டுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—4—'56 சனி

விலைவாசி ஏற்றம்!

★

'கடந்த சில கிழமைகளாக, விலைவாசிகள் விஷம்போல ஏறி வருவதைத் தடுக்க சர்க்கார் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது' என்று கேட்கப்பட்ட போது, சட்டசபையில், நிதி மந்திரி, 'உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம்' என்று மட்டும் தெரிவித்திருக்கிறார்.

அரிசி முதல், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை பொருள்களின் விலையும் வேகமாக, நாளுக்கு நாள் அதிகரித்து வருவதினால், வாழ்க்கையை ஏற்கனவே பெருஞ் சுமையாகக் கருதித் தத்தளித்துக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர மக்கள் எல்லாம் எத்தகு இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர் என்பதை நாம் குறிப்பிடத் தேவையில்லை.

பொதுவாக விலைவாசிகள் இன்று, கடந்த உலக மகாயுத்தத்தின்போதிருந்த அளவுக்கு ஏறத்தாழ உயர்ந்து நிற்பதைக் காண்கிறோம்.

யுத்தத்திற்குப் பிறகு, வெகுவாக விலைவாசிகள் குறையுமென்றார்கள்; ஆனால், பொருட்படுத்தி மகிழக்கூடிய அளவுக்கு விலைவாசிகள் குறையவில்லை. அதேபோல, 'சுதந்திர சர்க்கார்' ஆட்சியில் அமர்ந்ததும், அகவிலையைக் கட்டுப்படுத்தி, ஏறிய விலைகளை இறக்கி, மக்களின் வாழ்க்கையை இனிப்பாக்குவார்கள்—என்று கூறப்பட்டது; ஆனால், பரிதாபப்படத்தக்க வகையில், 1947-ல் இருந்த விலைவாசிகளின் நிலவரம், இன்று பன்மடங்கு உயர்ந்திருக்கிறதே ஒழிய குறைந்தபாடில்லை. இதை, சர்க்கார் வெளியிட்டுள்ள விலைவாசிக் குறி எண்களே தெளிவாகக் கூறுகின்றன.

'சுதந்திர சர்க்கார்' தனது நுண்ணறிவாலும், பேராற்றலாலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிசமான அளவு உயர்த்த மேற்கொண்டுள்ள முயற்சிகளே ஐந்தாண்டுத் திட்டங்கள்--என்று கூறுகிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்துவிட்டது; இரண்டாம் திட்டமும் அமுல் செய்யப்படவிருக்கிறது. முதல் திட்டத்தின் விளைவாக, மக்களின் தனிநபர் வருமானம் அதிகரித்திருக்கிறது—என்று பொதுப்படையாக புள்ளி விபரங்கள் தரப்பட்டாலும், பிரதேசவாரியாக - மாநிலவாரியாக அந்தப் புள்ளி விவரங்கள் தரப்படவில்லை. அவற்றைத் தற்போது சென்னை சர்க்கார் தர இயலாதவர்களாயுமிருக்கின்றனர் என்பதும் சட்டசபையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படியே தரப்பட்டாலும், சென்னை மாநில மக்களுடைய — தென்னாட்டு மக்களுடைய வருமானம அதிகரித்திருக்கிறது என்று காட்டுகிற புள்ளி விவரங்களாக அவை இருக்கமுடியாது.

எனவே, நமது மக்களின் வருமானம் அதிகரிக்கவில்லை; ஆனால் விலைவாசிகள் மட்டும் யுத்தகால நிலையைவிட உயர்ந்து கொண்டே செல்கிறது. எத்தனை வேதனையான நிலை?

முதல் திட்டத்தின் விளைவாக பொருள் உற்பத்தி, நிர்ணயிக்கப்பட்ட இலட்சிய எல்லைகளையும் மீறி அதிகரித்திருக்கிறது என்று கூறப்படுகிறது. இது உண்மையானால், நமது நிலை மேலும் வேதனைக்குரியதாகும் அல்லவா?

விலைவாசி ஏற்றத்திற்கான காரணம், சென்னை சர்க்காருக்கு இன்னும் திட்டமாகத் தெரியவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. இது, நமது நிலையில் நிலவும் வேதனையை இன்னும் பெருக்குகிறது.

டில்லி சர்க்கார், வரப்போகிற ஐந்தாண்டுகளில், ஆயிரத்திற்கும் அதிகமான கோடி ரூபாய்க்கு செலாவணிப் பெருக்கத்தை அதிகரிக்கவிருக்கிறார்கள். என்ன அவசியத்திற்கு? மொத்தமாக ரூ. 7,100 கோடி செலவிட அவர்கள் தீட்டியிருக்கும் திட்டத்தை அமுல் செய்வதற்காக! இந்த 7,100 கோடி ரூபாய் திட்டத்தில் சென்னை மாநிலத்தின் பங்கு ரூ. 170 கோடி மட்டுமே! எனவே, பல்லாயிரம கோடி ரூபாய் செலவில் வடநாட்டவர் பெறப்போகிற வாழ்க்கை முன்னேற்றத்திற்காக, அவர்களுக்கென அமைந்துள்ள டில்லி சர்க்கார், செலாவணியைப் பெருக்கப் போவதின் விளைவு, இங்கே பண்டங்களின் விலையேற்றத்திற்குக் காரணமாக அமைகிறது என்று இங்குள்ள பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். புரியவில்லை என்று கைவிரிக்கும் சர்க்கார் இதை எண்ணிப் பார்க்கட்டும்.

சரக்குகளைப் பதுக்கி வைத்து முதலாளிகள் கொள்ளை இலாபமடிக்கத் திட்டமிடுவதின் விளைவாகவுமிருக்கலாம் இந்த ஏற்றம் என்றால், அதனைக் கண்காணிக்க வேண்டியதும் சர்க்காரின் பொறுப்புத்தானே! எப்படியிருப்பினும், ஏறிவரும் விலைவாசிகளுக்கொப்ப, தொழிலாளர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் 'கிராக்கிப்படி' உயர்வு தரவேண்டுமென்பதில் உள்ள நியாயத்தை உணர்ந்து நடந்துகொள்வதுடன், ஏறிவரும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, நியாயமான விலைகளை நிர்ணயித்து, மக்கள் படும் அவதியைத் துடைக்க வேண்டியதும் ஆளவந்தார்களின் உடனடிப் பணியாகும்.

பெரிய — சிறிய தொழில்களைத் துவங்கி, உற்பத்தியைப் பெருக்கி, செல்வத்தைக் கூட்டி மக்களின் வாழ்வில் வளம் கொணர இந்த மகானுபாவர்கள் முற்படாவிட்டாலும் உடனடியாக இந்தத் தற்காலிக நிவாரணமேனும் தரவேண்டும்.

தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டம்

அரசியலார் உதவியைமுதலாளிகள் பயன்படுத்தவில்லையாம்!

புதுடில்லி, ஏப். 5—

"தொழிலாளருக்கு வீடுகட்டித் தர மானியம் தரும் திட்டத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு முதலாளிகளை வற்புறுத்தலாமா என்பது குறித்து திட்டக் குழு ஆலோசித்து வருகிறது" என்று, மத்திய சர்க்கார் மராமத்து அமைச்சர் மக்கள் சபையில் கூறிவிட்டு மேலும் சொன்னார்:—

"இந்தத் திட்டத்தை முதலாளிகள் பயன்படுத்திக்கொள்வது மிகவும் குறைவாக உள்ளது. அரசியலார் தரும் நிதிஉதவி போதியவையாக இருந்தும் இது பயன்படுத்திக் கொள்ளாதது விசித்திரமாகவுள்ளது."

அடுத்த திட்டத்தின்கீழ் தென்னாட்டில் சுமார் ரூ. $1\frac{1}{2}$ கோடி செலவில் இந்திய அரசினரின் அச்சுக்கூடம் நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்!

2-வது திட்டத்தில் குடியிருப்பு வசதிக்காக ரூ. 120 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

"சேரி ஒழிப்புப் பிரச்சினை அவசர உணர்ச்சியுடன் கவனிக்கப்பட வேண்டியதுதான் என ஏற்றுக்கொள்ளுகிறேன். இதற்காக 2-வது திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ 20 கோடி போதாது,"

என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் வசிக்கும்

வெளிநாட்டுக் குடிமக்கள்

புதுடில்லி ஏப். 4—

பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் குடிமக்கள் இந்தியாவில் 1955 ஜனவரி 1-ந் தேதியக் கணக்குப்படி 47,677 பேர்களாகும்.

இவற்றில் 5,706 பேர்கள் வெளிநாட்டு 'மிஷனரி'களைச் சேர்ந்தவர்களாகும்.

9,518 சீனர்கள்; 8,206 திபேத்தியர்கள்; 5,754 ஆப்கானியர்கள்; 4041 ஈரானியர்கள்; 3,600 அமெரிக்கர்கள்; 1,378 ஜெர்மானியர்கள்—என்று அந்த எண்ணிக்கையைப் பிரித்துக்கூறலாம். இதில் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சேர்க்கப்படவில்லை.

காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்களும், வெளிநாட்டுத் தூதுவராலயங்களைச் சேர்ந்தவர்களும் பதிவு செய்யப்படாதவர்கள் என்பதால், இந்த எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை என்றெல்லாம் இந்திய சர்க்காரிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

'பலாத்காரம் உபயோகிக்கமாட்டோம்'

பிரதமர் நேரு அறிவிப்பு

'காஷ்மீரில் பாகிஸ்தான் வசமுள்ள பிரதேசத்தைப் பொறுத்து, இந்திய சர்க்கார் எந்தவிதப் பலாத்காரத்தையும் பிரயோகிக்காது" என்று, பண்டித நேரு அறிவித்திருக்கிறார்.

காஷ்மீர் பற்றி விவாதிக்க பாகிஸ்தான் பிரதமரை தான் அண்மையில் சந்திக்கும் சாத்தியக்கூறு எதுவும் இல்லையென்றும் அவர் கூறினாராம்.

ஆச்சாரியார் விலகல்?

சென்னை, ஏப். 5—

சி. இராசகோபாலாச்சாரியார் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பதவியை இராஜிணாமச் செய்துவிட்டார் எனத் தெரிகிறது.

ஆச்சாரியார், டி. எம். தெய்வசிகாமணி, ஜி வெங்கடாசலம் ஆகியோரின் மேல்(சட்ட)சபை உறுப்பினர் பதவி காலம் ஏப். 20-ந் தேதியோடு முடிவுறுகிறது என்பதை நினைவிற்கொள்ளல் வேண்டும்.

மாவட்டங்களின் நிர்வாகம்

தமிழிலேயே நடைபெறவேண்டும் என்ற தீர்மானம் தோல்வி

அமைச்சர் கூறும் காரணம்

சென்னை, ஏப். 5—

'மாவட்ட அலுவலகங்களின் நிர்வாகம், கடிதப் போக்குவரத்து ஆகியவைகள் தமிழிலேயே நடைபெறவேண்டும்' என்று, தோழர் கஜபதி (நாயக்கர்) கொண்டுவந்த தீர்மானம் சென்னை மேல் (சட்ட) சபையில் தோற்றுவிட்டது.

தீர்மானத்தின் மீது தோழர் வி. வி. இராமசாமி பேசுகையில், 'கிராமவாசிகள், மாவட்ட அலுவலகங்களுக்குத் தமிழில் கடிதம் எழுதினால், ஆங்கிலத்தில் பதில் தரப்படுவதால் அதைக் கிராம மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"இத்தீர்மானத்தை இப்போதுள்ளபடி ஏற்கஇயலாது. மொழிக் குழு ஒன்றை குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்; அக்குழுவின் அறிக்கை கிடைக்க வேண்டும். 'ரெவினியூ' சீரமைப்புக் குழுவும் அதிக அளவில் தமிழை வழக்கிற்குக் கொண்டுவர சிபாரிசு செய்துள்ளது. மாநில சீரமைப்பு சிபாரிசுகள் வேறு அக்டோபரில் அமுலுக்கு வர இருக்கின்றன; கல்லூரிகளிலும் தமிழை போதனா மொழியாக்க யோசனை இருந்து வருகிறது; நடவடிக்கைகள் துரிதமாக உருவாகிவருகின்றன; ஆகையால் சர்க்காருக்குச் சங்கடமான நிலைமையை உண்டுபண்ணுவதாயுள்ள இத்தீர்மானத்தை ஏற்க முடியாது."

10,000 'அம்பர் சர்க்கா'

உடனடியாக உற்பத்தி செய்யப்படுமாம்!

புதுடில்லி, ஏப். 5—

பெரும் அளவில் அம்பர் சர்க்கா உற்பத்தி செய்வதுபற்றி இறுதியாக முடிவேற்படும்வரை, உடனடியாக 10,000-க்கு மேல் 'அம்பர் சர்க்கா'க்கள் உற்பத்தியை தொடர்ந்து நடத்த அரசினர் தீர்மானித்துள்ளதாக உற்பத்தி இலாகா அமைச்சர் கே. சி. ரெட்டி மக்கள் சபையில் அறிவித்துள்ளனர்.

'அம்பர் சர்க்கா' உற்பத்தித் திட்டம் பெரும் அளவு அமுல் நடத்தப்படும் சமயம் 2-வது ஐந்தாண்டுத் திட்டச் செலவின் கீழ் உபரியாக ரூ. 150 கோடியிலிருந்து 200 கோடி வரை சேமிப்பது இயலக் கூடியதொன்று எனத் தான் எதிர்பார்ப்பதாகவும், அம்பர் சர்க்காவின் உற்பத்திச் சக்தி பிரமாதம் என்றும், வழக்கமான சர்க்காவில் தயாராகும் நூலைக் காட்டிலும் 'அம்பர் சர்க்கா' நூல் குறைந்தது 50 சதவிகிதம் விலை மலிவாகவும், நூலின் தரமும் உயர்வாகவும் இருக்குமென்று அவர் தெரிவித்தாராம்.

ஆலோசனைக் குழுவுக்கு ரூ. 25,368 செலவாம்!

சென்னை, ஏப். 6—

"ஆரம்பக் கல்வித் திட்டம் பற்றி சர்க்காருக்கு ஆலோசனைக் கூற அழகப்பச் செட்டியாரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு அரசாங்கம் ரூ 25,386 செலவிட்டது" என்று, மேல் (சட்ட) சபையில் அமைச்சர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

பல ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் 17 வெளிநாட்டு நிபுணர்கள்

பிலாய் உருக்குத் தொழிற்சாலையில் பணிபுரிகின்றனர்

"சோவியத் ரஷ்யாவின் உதவியுடன் பிலாயில் அமைக்கப்படும் உருக்குத் தொழிற்சாலையில் இப்போது, 17 வெளிநாட்டுக்காரர்கள் பணி புரிந்து வருகின்றனர்,"

என்று, மந்திரி கிருஷ்ணமாச்சாரியார் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

"ஒரு பிரதம எஞ்சினீயர் ரூ. 4,500 சம்பளம் பெறுபவராகவும், 5 பிரதம நிபுணர்கள் ரூ. 2,850 சம்பளம் பெறுபவர்களாகவும், ரூ. 2,400 சம்பளத்தில் ஆறு நிபுணர்களும், மொழி பெயர்ப்பாளர்கள் ரூ. 1 950 வீதம் 5 பேர்களும் பணியாற்றி வருகின்றனர்,"

என்றும், அவர் தகவல் தந்திருக்கிறார்.

சமூகத்தின் தீய பழக்கவழக்கங்கள்

'ஒழிப்பதில் பெண்கள் சிறந்த பணியாற்ற முடியும்'

வகுப்பு வேற்றுமையே நாட்டை அரிக்கிறதென்றும், அதை ஒழித்துவிடுவதில் பெண்கள் சிறந்தப் பணியாற்ற முடியுமென்றும், சமூகத்தின் தீய பழக்கவழக்கங்களை தீர்த்துவிடும் வேலையையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் பிரதமர் நேரு கமலா நேரு பெண்கள் பள்ளியில் பேசுகையில் கூறியுள்ளார்.

வேலையிலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள்

மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனராம்!

வேலையிலிருந்து ஓய்வு பெற்ற 465 பேர்களைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொண்டதையும், 114 அதிகாரிகளின் வேலைக் காலத்தை அதிகரித்துக் கொண்டதையும், டெல்லி உள்நாட்டிலாகா 1955—56ம் ஆண்டில் அங்கீகரித்திருக்கிறதாம்.

இலஞ்ச ஊழல் விசாரணை

போலீசாருக்கு உதவுமாறு சர்க்கார் ஊழியருக்கு உத்தரவு

புதுடில்லி, ஏப். 5—

இலஞ்சப் பழக்கத்தை ஒழிப்பதில், அது பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்கு விசாரணையின் போது, தனி போலீஸ் நிறுவனத்தாருக்கு எல்லா சர்க்கார் அதிகாரிகளும்—குறிப்பாகக் கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகளும் உதவ வேண்டும் என்று உள்நாட்டிலாகா உத்தரவிட்டுள்ளதாம்.

இலஞ்ச ஊழல்களைக் காணுவதற்காக, இந்தத் தனிப் போலீசார் வைக்கும் பொறிகளை முன்பெல்லாம் நீதிபதிகள் முன்கூட்டியே பார்வையிட்டு வந்தனர். ஆனால், உயர் நீதிமன்றம், அம்மாதிரி நீதிபதிகள் முன்கூட்டிப் பார்வையிடல்கூடாது என அண்மையில் உத்தரவிட்டுவிட்டது. எனவே, காணப்படும் வழக்குகளை ருசுப்பிக்க, தகுந்த சாட்சியம் தேட வேண்டியது போலீசாருக்கு அவசியமாகிறது. மேலும் இம்மாதிரி வழக்குகளில் சர்க்கார் ஊழியர்கள் ஒத்துழைக்க மறுத்துவிடுகின்றனர் என்பதே கடந்த கால அனுபவம். அதனால்தான், இப்போது உள்நாட்டிலாகா இப்படி ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது என்றும் விளக்கம் தரப்படுகிறது.

உள்ளதையும் பறிகொடுத்த மந்திரிகள்

மருதூரில் என். வி. நடராசன்

1—4—56ல், மருதூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம், குமரவேலன் திடலில் நடைபெற்றது.

தோழர் பி. போலமன் தலைமை தாங்க தோழர் இளமுருகு-பொற்செல்வி கழகக் கொடியை உயர்த்தி விளக்கமும் கூறினர். ஓவியர் பாலு சிறிது நேரம் பேசினர்

பின்னர் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசனுக்கு பல கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டது.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" தமிழ் நாட்டுடன், பீர்மேடு, தேவிகுளம் போன்ற பகுதிகளைச் சேர்ப்பதற்காக டில்லி செல்வதாகச் சொன்னவர்கள், இருந்த செங்கோட்டையிலும் பாதியைக் கோட்டைவிட்டுத் திரும்பினர்கள். நாட்டுப் பற்று, மானபிமானம் இல்லாது, உள்ளதையும் இழந்தவர்கள் நம் மந்திரிகள். ஆகவேதான் நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் அக்கறையுள்ளவர்கள் ஆட்சிக்கு வருதல் வேண்டுமென்று நாம் கூறுகிறோம்."

தோழர் பி. எஸ். கலைமணி குழுவினரின் இசையரங்கு நடைபெற்றது.

1955—56-ம் ஆண்டில், 29 தேசிய மாணவர் படை (பெண்கள் பிரிவு) முகாம்களில் மொத்தம் 3,558 கோடட் மாணவிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

நதிகளில் சாக்கடை நீர் பாய்கிறதாம்!

தடுப்பதற்குநடவடிக்கைகள் எடுக்கக் கோரிக்கை

மாநில சர்க்காருக்கு எச்சரிக்கை

புதடில்லி, ஏப் 4—

" நதிகளில் சாக்கடை நீர் பாய்வதினுல் மக்களின் சுகாதார வசதிகள் பாதிக்கப்படுகின்றது என்று மாநில சர்க்கார்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. அதைத் தடுக்கக் கூடுமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி மாநில சர்க்கார்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது ; இது பற்றி ஆய்வும் நடைபெற்று வருகிறது "

என்று, மக்கள் சபையில் மத்திய சுகாதார அமைச்சர் இராஜகுமாரி அமிர்த கௌரி தெரிவித்துள்ளார்

'சேரிகளை அபிவிருத்தி செய்தாக வேண்டும்'

குடியிருப்புப் பிரச்சினை தீர வழி என்ன?

மக்கள் சபையில் உறுப்பினர்கள் பேச்சு

" குடியிருப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்க்கார் மக்களுக்கு, நியாயமான விலையில் வீடு கட்டும் சாமான்கள் கிடைக்கச் செய்வதுடன், தொழிலாளர்களுக்கு, முதலாளிகளே வீட்டு வசதி செய்து தரச் செய்யவும் வேண்டும். மேலும், சர்க்கார் நிறைவேற்றும் குடியிருப்பு வசதித் திட்டங்களில் தாண்டவமாடும் இலஞ்ச ஊழலை ஒழிக்கவும் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும்,'

என்று, பல உறுப்பினர்கள், மக்கள் சபையில், தொடர்புடைய இலாகா மானியக் கோரிக்கையின் போது வற்புறுத்தியிருக்கின்றனர்.

தோழர் இராதாராமன் என்ற காங்கிரஸ் உறுப்பினர் பேசுகையில், டெல்லியில் உள்ள சேரிகள் நிலை பற்றிக் குறிப்பிட்டு, அவை ஒழிக்கப்பட வேண்டுமெனக் கோரினர்.

" சுகாதாரமற்ற சிறு சிறு சந்துகள், விளக்கொளியின்றி இருளில் மூழ்கிக் கிடக்கும் அந்த சேரிகளில் மக்கள், மிருகங்களை விடக் கேவலமான நிலையில் வாழ்கின்றனர் ; புது டில்லியின் விசாலமான ஒளி நிரம்பிய அழகான வீதிகளைப் பார்த்துவிட்டு, டெல்லிச் சேரிகளைக் காணும்போது இந்த அவலம் நன்கு தெரிகிறது. இதனைப் போக்க வழி கண்டாக வேண்டும் " என்றும் இடித்துரைத்திருக்கிருர்.

தோழர் அனந்தன் நம்பியார் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" தொழிலதிபர்கள் தொழிலாளர்களுக்குக் கட்டாயமாக வீட்டு வசதி செய்து தரவேண்டும் என்று கோருகிற சட்டம் இதுவரையும் இயற்றப்படவில்லை இந்த விஷயத்தில் சர்க்கார் வருந்தத்தக்க தோல்வியைக் கண்டிருக்கிறது.

" மேலும் ராஷ்டிரபதி பவனத்தில் சுமார் 250 தொழிலாளர்கள் மிருகங்கள் போல, நடத்தப்படுகிருர்கள்—ராஷ்டிரபதி மூன்னிலையிலேயே". என்று குறிப்பிட்டிருக்கிருர்.

பெரும் தொழில்கள் துவங்கும் வேலையை டெல்லியே கவனிக்குமாம்!

மாநிலங்கள் கவலைப்படத் தேவை இல்லையாம்!

வடவரின் வஞ்சகம் புரியாததா?

" புதிய தொழில்கள் துவங்க வேண்டுமா? அதெல்லாம் மத்திய சர்க்கார்தான் பார்த்துக் கொள்ள வேண்டும் ; மாநில சர்க்கார்கள் அதைப்பற்றிக் கவலைப்படக் கூடாது ' என்று டெல்லி கூறுகிறது.

' பெரும் தொழில் திட்டங்கள் துவங்கும் பொறுப்பு டெல்லியிடம்தான் இருக்க வேண்டுமே தவிர, மாநிலங்களிடத்தில் இருத்தலாகாது ' என்று திட்டக்குழு முடிவெடுத்திருக்கிறதாம்.'

இந்தத் தகவலை ஜெய்சுக்லால் ஹாதி என்ற நீர்ப்பாசன மின்சார துறை இலாகா உதவி மந்திரி மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிருர். டில்லி சர்க்காரிடம்தான் இந்த அதிகாரம் இருக்க வேண்டுமென டில்லி கருதுவதற்குக் காரணம், அப் போதுதானே தன்னிஷ்டம் போல, தொழில்களை, தான் விரும்பும், தனது இனமக்கள் வாழும் வடநாட்டுப் பகுதியிலேயே அமைத்துக் கொள்வது சாத்தியமாகும் என்பதைத் தவிர வேறென்ன ?

இதற்கு, ' நான் அடிப்பதுபோல அடிக்கிறேன் ; நீ அழுவது போல அழு ' என்ற முறையில், வேறு உதாரணம் காட்டியிருக்கிறது, டெல்லி !

உத்திரப் பிரதேச மாநில சர்க்கார், 11 தொழில் திட்டங்களைத் தந்தார்களாம் ; அவற்றில் நான்கை மட்டும் அனுமதித்து விட்டு, எஞ்சியவற்றை மறுத்து விட்டனராம்-' பெரிய தொழில் நிர்மாண விவகாரங்களை டெல்லியே நேரடியாக கவனிக்கும் ' என்ற காரணத்தைக் காட்டி !

இதைக் குறிப்பிட்டு, ' வேறு எல்லா மாநிலத்தவருக்கும் கூறுவதுபோல, மாநில சர்க்கார் பெரும் தொழில் துவங்குவது பற்றிக் கவலைப்படத் தேவை இல்லை ; அதை நாங்களே பார்த்துக்கொள்கிரேம் ' என்கிறது டெல்லி! எப்படியிருக்கிறது பார்த்தீர்களா ?

இந்தக் கருத்திற்குள் புதைந்து கிடக்கும் வஞ்சக நோக்கத்தை, தென்னுட்டவர் அறியாரா, என்ன ?

சோழவந்தான் தி.மு.க. மாணவர் கிளை துவக்கம்

சோழவந்தான், ஏப். 1—

இன்று காலை 10-மணியளவில் சோழவந்தான் தி. மு. க மாணவர் கிளை தோழர் தா. ஆவுடையப்பன் தலைமையில், அருணோதயா டாக்கீசில் துவக்கி வைக்கப்பட்டது.

தோழர் கே. ஏ. மதியழகன் சோழவந்தான் தி. மு. க. மாணவர் கிளையைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினர்.

தோழர்கள் மதுரை கே. எஸ். சந்தானம், தி. மு. க. மாநில மாணவர்கிளை அமைப்புக்குழு உறுப்பினர் மதுரை பாண்டியன், மதுரை தியாகராயர் கல்லூரி மாணவர் சேரலாதன், சோழவந்தான் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் தோழர்கள் பன்னீர் செல்வம், செங்குட்டுவன், அப்பாசலி, செல்லதுரை, குப்புசாமி ஆகியோர் பேசினர். நன்றி கூறலுடன் பகல் 1 மணிக்கு விழா முடிவுற்றது.

தோழர் மதியழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" மாணவர்கள் நன்ருகப் படிக்க வேண்டும் என்று பிறர் கவலைப்படுவதைவிட, ஆயிரம்மடங்கு கவலைப்படுவோர் நாம் ; மாணவர் கண்ணியத்தோடு வாழ வேண்டும் என்று கருதுவோர் நாம்.

" மாணவர்கள் அரசியலைப்பற்றி கவலைப்பட வேண்டாம் ; பெரியோர் பார்த்துக் கொள்வர் என்று கூறுகின்றனர் சிலர் ; பெரியோர்கள்தான் என்ன செய்தனர் ? பெரியோர்கள்தான், சட்டசபையில், ' தமிழ் நாடு ' என்ற பெயர் வேண்டாம் என்கின்றனரே ! ' தமிழ் நாடு ' என்னும் பெயர் கூட வேண்டாம் என்னும் சழக்கர்கள்தானே —தாசர்கள்தானே, மதிகெட்டவர்கள்தானே—ஆட்சியில் உள்ளனர்!

" நம் மொழி உயர; தாய் இனம் உயர ; நம் தாய் நிலம் வளம்பெற மாணவ மணிகள் உதவ வேண்டும். அப்பணியில் ஈடுபடும் அவர்கள் வளர வேண்டும் ; அவர்கள் பணி உயர வேண்டும் "

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலலுடன், விழா முடிவுற்றது.

பாகிஸ்தானில் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டம்

பாகிஸ்தானிற்கான ஐந்தாண்டு தேசிய அபிவிருத்தித் திட்டம் ஒன்றை பாகிஸ்தான் திட்டக்குழு இறுதியாகத் தயாரித்து முடித்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

நீர்ப்பாசனம், மின்சாரம், சாலைகள், இரயில்வேக்கள், விவசாயம், முதலிய சகல துறைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு திட்டத்தில் வாய்ப்பு இருப்பதாகத் தெரிய வருகிறது.

புதிய அரசியல் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் பொருளாதாரக் 'கமிஷன்' இனி இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரிசீலனை செய்யும் என்றும் தெரிய வருகிறது.

பெரும் 'புரட்சி' ஏற்படும்?

" தொழில் மயமாக்கும் வேலை துரிதமாக நடைபெருவிட்டால், இந்தியாவில் சமூக அரசியல் துறைகளில் பெரும் 'புரட்சி' ஏற்படும்,"

என்று பேராசிரியர் மகாலனேபிஸ், கல்கத்தாவில் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

நான் ஒரு 'அரசியல்வாதி அல்ல' என்று கூறிவிட்டு, மேலும் தனது கருத்தை விளக்க அவர் மறுத்து விட்டிருக்கிருர்.

நிலைமை மிகவும் மோசமாகிவிட்டதாம்!

ஐந்தாண்டுத் திட்டமும் பாதிக்கப்படக்கூடுமாம்!

வெளியேறி வரும் அகதிகள் பற்றி பிரதமர் நேரு

அலகாபாத், ஏப். 4—

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து ஏராளமான அகதிகள் இந்தியாவுக்கு வருவதால் நிலைமை மிகவும் மோசமாகி விட்டதென்றும், ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள எல்லா முன்னேற்றத் திட்டங்களையும் இது பாதிக்குமென்றும் பிரதமர் நேரு கூறியுள்ளார்.

கிழக்கு பாகிஸ்தானிலுள்ள 125 இலட்சம் இந்துக்களில், 40 இலட்சம் பேருக்குமேல் எல்லையைக் கடந்து வந்துவிட்டனர் என்றும், இவர்களையெல்லாம் இந்திய அரசினர் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

****

திராவிட வரலாற்றில் ஒரு திருப்புமுனை!

★ திராவிடம் வளம் பெறவும்
★ திராவிடர் நலம் பெறவும்
★ அதற்கான திட்டம் தீட்டி செயல்படுத்தவும்

மே 17, 18, 19, 20 தேதிகளில்

திருச்சி

பந்தயத் திடலில்

('ரேஸ் கோர்ஸ்' ஜமால் முகம்மது கல்லூரி அருகில்)

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

நடைபெறும்

★

பொதுச் செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும்
நாட்டு விடுதலை குறித்து நல்லுரை ஆற்றுவர்

★

எழுச்சியூட்டும் நாடகங்கள்—இன்னிசை விருந்து—
ஓவியக் காட்சி ஆகிய சிறப்புகளும் உண்டு

★

திரண்டு வாரீர் தோழர்களே !

—வரவேற்புக் குழு

****

அடுத்த பொதுத் தேர்தல்

ஒத்திவைக்கப்பட மாட்டாதென பிரதமர் நேரு உறுதி

அடுத்த ஆண்டு நடைபெற வேண்டிய பொதுத் தேர்தல்கள், திட்டமிடப்பட்டுள்ளபடி கட்டாயம் நடைபெறும் என்று பண்டித நேரு அலகாபாத் நகரில் கூறியிருக்கிருர்.

'ஓரிருமாதங்கள் வேண்டுமானுல் தள்ளிப் போகலாம் ; பிப்ரவரியில் நடைபெறுவதற்கு மாறாக மார்ச் திங்களில் நடைபெறலாம் ; ஆனுலும், தேர்தல்களை குறிப்பிட்ட காலத்தில் நடத்திவிட எண்ணியுள்ளோம்' என்று அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிருர்.

' புனரமைப்பு செய்யப்பட்ட மாநிலங்கள் அடுத்த அக்டோபர் திங்கள் 2-ந்தேதி, அமைந்துவிடுமா ?' என்று கேட்கப்பட்டபோது ' ஆம் ; அப்படித்தான் நம்புகிறேன்' என்றும் தெரிவித்திருக்கிருர்.

இந்தியாவில் 'பென்சில்' தொழில் உற்பத்தி

நிலைமை பற்றி விளக்கம்

புதுடில்லி, ஏப். 5—

" தற்போது நாட்டிற்கு ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் 'குரோஸ் பென்சில்' தேவைப்படுகிறது ; ஆனுல் உற்பத்தி 3 இலட்சம் 'குரோஸ்'தான்," என்று, மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பென்சில்' தொழில் முன்னேற்றத்திற்கு ஊக்கமளிப்பதற்காகப் 'பென்சில்' இறக்குமதியை அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளதென்றும், 'பென்சில் ஸிலிப்பு'கள் உற்பத்தி உதவிக்காக வெளிநாட்டுத் தொழில் நுணுக்க நிபுணர்களின் சேவையைப் பெறுவதற்கு சர்க்கார் ஏற்பாடுகள் செய்துவருகின்றனரென்றும் அறிவிக்கப்பட்டது

பறிபோகும் செங்கோட்டைப் பகுதிகள்

அளவெடுக்கும்போது சென்னைப் பிரதிநிதிகள் இல்லாமற்போனது ஏன்?

சட்டசபையில் நிதி மந்திரி மழுப்புகிறார்

"செங்கோட்டைத் தாலுகாவில் கேரளத்திற்கு எவ்வளவு?—தமிழகத்திற்கு எவ்வளவு?—என்று பங்கு போடுகையில், திரு-கோச்சி சர்க்கார், சென்னை சர்க்காருக்கு ஏன் தகவல் தெரிவிக்க வில்லை என்று, சென்னை சட்டசபையில் கேள்வி கேட்கப்பட்ட போது, நிதியமைச்சர் கனம் சுப்பிரமணியம், மழுப்பிவிட்டு நேரடியான பதில் தரா திருந்திருக்கிறார்.

"திரு-கொச்சி சர்க்கார் தற்காலிக மான பிரிவினை அளவைத்தான் கணக்கெடுத்தனர்; அவர்கள் கையாண்ட வழிமுறை சரியா னதுதான், சென்னைக்கும் இந்த விவகாரத்தில் அக்கறை இருக்கிறது இருக்கிறது என்பதால் தான், தாங்கள் அளவெடுத்த பிரிவினை விவரங்களை நமக்கும் அனுப்பித் தந்திருக்கின்றனர். இந்தப் பிரிவினைக் கணக்கெடுக்க டெல்லியின் சம்மதமும் திரு-கொச்சி சர்க்காருக்கு இருந்தது.

"இப்போது சென்னை சர்க்கார் மூன்று அதிகாரிகளை செங் கோட்டைத் தாலுகாவிற்கு அனுப்பி, திரு-கொச்சி சர்க்கார் தயாரித்த பிரிவினை அளவுகள் சரியானவை தானா என்று பார்த்து வரச்சொல்லியிருக்கி றோம்,"

என்று அந்த மந்திரி குறிப்பிட்டி ருக்கிறார்.

தேதி குறிப்பிடாமல் சட்டசபை ஒத்திவைப்பு

நிகழ்ச்சிகள்மீது கண்ணோட்டம்

சென்னை, ஏப். 7—

சென்னை சட்டசபையின் இப் போதைய கூட்டத் தொடர்பு நேற் றுடன் முடிவடைந்தது.

வரவு - செலவுத் திட்டக் கூட் டம், பிப். 25-ந் தேதி துவங்கியது.

தனிப்பட்ட உறுப்பினரொருவ ரின் பிரரேபணையையும், 33 சர்க் கார் மசோதாக்களையும் சபை நிறை வேற்றியுள்ளது.

1,803 கேள்விகளுக்குப் பதி லளிக்கப்பட்டுள்ளது; 541 கேள் விகளுக்கு எழுத்து மூலம் பதில் தரப்பட்டிருக்கிறது.

712 வெட்டுப் பிரரேபணைகள் கொண்டுவரப்பட்டன. 'கமிட்டி' கள் பல 75 தடவை கூடியுள்ளன. சபை நடவடிக்கைகளை 30,311 'விசிட்டர்'கள் பார்வையிட்டுள்ள னர் என்றெல்லாம் கூறப்பட்டுள் ளது.

'தீச்சுடர்' நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு

8—4—56 ஞாயிறு காலை 9 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில் நடை பெறும்.

திரைப்பட பின்னணி இசைச் செல்வி திருமதி டி. வி. இரத்தினம் இசை விருந் தளிப்பார்.

தோழர் சி. பி. சிற்றரசு —'புத்தர் புன்னகை'

தோழர் கண்ணதாசன் —'இலக்கியத்தில் காதல்';

தோழர் டி. கே. சீனிவாசன் —'மாஸ்கோ பாதையில் நாம்'

என்ற தலைப்புகளில், சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

நன்கொடை அணா 8

'பெல்லாரி பிரச்சினைத் தீர்வுக்கு வாக்கெடுப்பு வேண்டும்'

'மைசூர் சட்டசபைக்கு நடைபெறும் உபத் தேர்தலை வாக்கெடுப்பாகக் கொள்க'

இந்தியப் பிரதமருக்கு 82 ஆந்திர சட்டசபை உறுப்பினர் விண்ணப்பம்

"பெல்லாரியின் எதிர்காலத்தில் முடிவு காண்பதற்காக, அப்பகுதி மக்களிடை வாக்கெடுப்பு நடத்தவேண்டும்."

என்று, எண்பத்திரண்டு ஆந்திர சட்டசபை உறுப்பினர்கள், இந்தியப் பிரதமருக்கு விண்ணப்பித்துக் கொண்டுள்ளனர்.

அவ்விண்ணப்பத்தில் சட்ட சபை உறுப்பினர்களுடன் சட்ட சபைத் துணைத் தலைவர் கல்லூர் சுப்பாராவ் அவர்களும் கையெழுத் திட்டுள்ளார்.

அம்முறையீட்டில் மேலும் கோரியிருப்பதாவது:—

"பெல்லாரி பிரச்சினையை ஒரு வழக்காகக்கொண்டு, மைசூர் சட்ட சபையில் தாம் பெற்றிருந்த உறுப் பினர் பதவியை, சுங்கப்பா என்ப வர் துறந்துவிட்டார். மீண்டும் நடைபெறப்போகும் துணைத் தேர் தலில், அதே உறுப்பினர், அதே பெல்லாரியின் எதிர்காலத்தை, தேர்தல் வழக்காகக் கொண்டு, போட்டியிடப் போகிறார். அந்த தேர்தல் முடிவையே அப்பிரச் சினையில் முடிவு காட்டும் வாக் கெடுப்பாகக் கொள்ளவேண்டும்."

இந்தியா—பாக். நல்லுறவு வளர வழி!

'ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்க'

காஷ்மீர் விவகாரம்: ஐ. நா.-விற்கு எடுத்துச்செல்ல முடிவு

கராச்சி, ஏப். 6—

காஷ்மீர் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்காக நடைபெற்ற பாகிஸ்தான் பார்லிமெண்டின் விசேடக் கூட்டத்தில், பாக். பிர தமர் முகம்மது அலி பேசுகையில், காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் ஷேக் அப்துல்லாவையும், மற்ற அரசியல் ஊழியர்களையும் விடுதலை செய்யுமாறு கோரியுள்ளார்; இப் படிச் செய்வது இந்தியா-பாகிஸ் தானுக்கிடையே நல்லுறவு ஏற்பட வாய்ப்பு ஏற்படும் என்று கூறியுள் ளார்.

இந்தியப் பிரதமர் நேரு சமீபத் தில் விடுத்துள்ள அறிக்கை யினால், அவருடன் இனி நேரடி யாகப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு வழியில்லாமல் போய்விட்டது என்றும், எனவே, காஷ்மீர் பிரச்சினையை மீண்டும் ஐ நா. பாதுகாப்புச் சவுன்சிலுக்குக் கொண்டுபோக வேண்டியதுதான் என்றும் கூறி யுள்ளார்.

மேலும் அவர் தனது பிரசேதத் தைப் பாதுகாத்துக்கொள்ள பாகிஸ்தான் எல்லா நடவடிக்கை யையும் எடுக்குமென்றும், காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை யைப் பெற்றுத் தர எல்லா சக்தி களையும் பயன்படுத்தி, பாகிஸ்தான் போராடுமென்றும் குறிப்பிட்டுள் ளார்.

'பலத்தைக் காட்டி பாகிஸ்தா னைப் பயமுறுத்த இந்தியா முயன்று வருகிறது; இந்தப் பய முறுத்தல்களுக்கு பாகிஸ்தான் பணியாது' என்றும் அவர் கூறி யுள்ளார்.

கோத்தலாவலைக்குச் சீட்டு?

ஆளும் கட்சிகளுக்கு நல்ல படிப்பினை!

ஆராய்ச்சிக்குரிய இலங்கைத் தேர்தல்கள்

கொழும்பு, ஏப். 6—

இலங்கையில் நடைபெற்றுவரும் பொதுத் தேர்தல்களில் ஆளும் கட்சியான கொத்தலாவலையைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் தோல்விகள் ஏற்பட் டுள்ளன.

முதல் பிரிவுத் தேர்தல் 42 தொகுதிகளுக்கு நடைபெற்றது. இதில் இப்போதைய ஏழு மந்திரிகள் தோல்வி கண்டிருக் கின்றனர்.

48 இடங்களில் இடதுசாரி கள் 33 இடங்களைப் பிடித்து விட்டனர்.

இடதுசாரிகளில் 'மகாஜன எக் சாத் பெரமுன' என்ற மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி 28 இடங்களைப் பிடித் துள்ளது.

ஒன்பது மந்திரிகள் போட்டி யிட்டதில் பிரதமர் கொத்தலா வலை மந்திரி எம். டி. பண்டா என்ற இருவருக்கு மட்டுமே தலை தப்பியிருக்கிறது.

வேடிக்கையான நிகழ்ச்சி ஒன்றுகூட நடைபெற்றிருக் கிறது. மந்திரிகளாயிருக்கி றோம் என்ற மமதையோடிருப் பவர்களுக்கு மகத்தான பாடம் கற்பிக்கும் நிகழ்ச்சி அது!

தொழிலாளர் மந்திரியாயி ருந்த எம். சி. எம். கலீல் என்ப வர், ஐக்கிய தேசியக் கட்சி யின் சார்பில் போட்டியிட் டார்; அவரை எதிர்த்து மக்கள் முன்னணியின் சார்பில், சமீப காலம்வரை 'பியூன்' வேலை பார்த்துவந்த எம். எஸ். தேயிஸ் என்ற தோழர் போட்டியிட்டு, மந்திரியைத் தோற்கடித்திருக் கிறார்.

அதிகமான இடங்களைக் கைப் பற்றியுள்ள மக்கள் முன்னணி யின் தலைவர் பண்டார நாயகா என்பவராகும்.

மற்றும் டிராட்ஸ்கி நவலங்கா சமாஜ் கட்சி நான்கு இடங்களை யும், கம்யூனிஸ்டுகள் ஒரு இடத் தையும் கைப்பற்றியிருக்கின்ற னர்.

இப்போது முடிவு அறிவிக் கப்பட்டிருக்கிற 42 இடங்க ளில், முன்பு ஆளும் கட்சியினர் 35 இடங்களைப் பிடித்திருந்த னர். இப்போது எட்டு இடங் களை மட்டுமே பிடித்துள்ளனர்.

தேர்தல் முடிவுகளின் நிலவ ரம் சூரந்து ஆராயத்தக்கதாகும்.

மீண்டும் தாக்குதல்

செய்ரோ, ஏப். 6—

இஸ்ரேல்—எகிப்து எல்லையில் காஜா பகுதியில் எகிப்தியப் பாச றைகள் மீது இஸ்ரேலியப் படை கள் மீண்டும் துப்பாக்கிப் பிரயோ கம் துவக்கியதாகவும், இஸ்ரேலியர் கள் பீரங்கிப்போரைத் தொடர்ந்து நடத்திக்கொண்டுள்ளதாகவும் செய் திகள் கூறுகின்றன.

இஸ்ரேல்—எகிப்து எல்லையோ ரம் மீண்டும் தாக்குதல்கள் துவங்கி விட்டமையால் பாலஸ்தீனத்திற் கான ஐ. நா. கமிஷனர், தமது ரோமாபுரிப் பயணத்தை நிறுத்தி விட்டாராம்.

கல்வித் திட்டத்திற்கு ஆலோசனை குழுவாம்

சென்னை, ஏப். 6—

சீரமைக்கப்படும் கல்வித் திட்ட அமுல் குறித்த கல்வி அமைச்ச ருக்கு ஆலோசனை கூற சட்டசபை உறுப்பினர்கள் அறுவர் அடங்கிய குழு ஒன்றை நிறுவ, சென்னை சட்டசபை தீர்மானித்தது.

இக்குழுவில் டாக்டர் கே. பி. மேனன், தோழர்கள் பி. இராம மூர்த்தி, பி. கே. இராஜா சிதம் பரம், எஸ். சுயம்பிரகாசம், வி. கே. இராமசாமி (முதலியார்), என். இராமகிருஷ்ண (அய்யர்) ஆகி யோர் உறுப்பினர்களாவர்.

மதுவிலக்கு: நிச்சயம் வெற்றி பெறுமாம்!

பம்பாய், ஏப். 6—

மதுவிலக்கு விசாரணைக் குழு சிபாரிசுப்படி நாடெங்கும் மது விலக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டே தீருமென்றும், அது இந்நாட்டில் நிச்சயம் வெற்றி யடைந்தே தீரும் என்றும் பம்பாய் மதுவிலக்கு வார விழாவில் பேசு கையில், மத்திய அமைச்சர் நந்தா கூறினாராம்.

தோட்டத் தொழிலாளர் போராட்டம் நீடிக்கிறது

சமரசப் பேச்சுக்கள் தோல்வி

கோயம்புத்தூர் ஏப். 6—

மாநிலத்திலுள்ள 2 இலட்சத் திற்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளருக்கு 1955-ம் ஆண் டுக்கு அதிகப்படி இடைக்கால 'போனஸ்' தருவது பற்றி தொழி லாளர் - நிர்வாகத்தினர் - அரசினர் ஆகியோரிடையே நடைபெற்ற கூட்டு ஒப்பந்தப் பேச்சு தோல்வி யில் முடிவுற்றது.

இத்திங்கள் முதல் தேதி முதல் 841 தோட்டத் தொழிலாளர் களின் 'உண்ணாவிரதம்' நீடிக் கிறது! ஒரு வயது மழலை மொழி குழவியுடன் ஒரு அன்னை உள்பட 38 பெண்டிரும், 'உண்ணாவிரதம்' மேற்கொண்டுள்ளனர்.

கழகக் கூட்டம்

✶

கோவை:

சிரியன் சர்ச் ரோடு

8—4—56 மாலை 6-30 மணிக்கு

பேசுவோர்:

உடுமலை-நாராயணன்

எஸ். ஏ. இராசமாணிக்கம்

சி. டி. தண்டபாணி

கோவை-செழியன்

சென்னை 40-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

7—4—56 இரவு 9 மணியள வில் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 37-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

8—4—56 மாலை 4 மணியள வில், கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, கழக 5-ம் ஆண்டு விழா ஏற்பாடுகள் பற்றிய முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

படிப்பக நிதிக்கு 'மணி மகுடம்'—நாடகம்

திருப்புத்தூர் கருணாநிதி படிப் பக வளர்ச்சி நிதிக்காக, சிவ கங்கை ரோடு திடல், அழகிரி அரங்கில், 10—4—56 இரவு 10 மணிக்கு, தோழர்கள் எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் நடிக்கும் 'மணி மகுடம்' நாடகம் நடை பெறும்.

பாராட்டுக் கூட்டம்

8—4—56 மாலை 4 மணியள வில், சென்னை எண் 142, ஆள்வார் பேட்டை 46-வது தி. மு. கழகப் பணிமனையில், தோழர் இராம- வெள்ளையன் (46-வது வட்ட மாவட்டப் பிரதிநிதி) அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம் நக ராண்மைக் கழக உறுப்பினராக வெற்றிபெற்றமைக்கு, கழகச் சார் பில், ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். தோழர் இளம்பரிதி தலைமை தாங்குவார். தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்குவர்.

சூளை நகர இளைஞர் கழகம்

8—4—56 காலை 8 மணிக்கு, திரு. அ. இராமமூர்த்தி தலைமை யில், சூளை குருசேடிபுரத்தில் பால் இலவசமாக வழங்கப்படும். அன்று காலை 10 மணிக்கு சூளை மாணிக்கச் செட்டித் தெருவிலுள்ள மேற்படி கழக மனையில் சுகாதார டைரக் டர்களின் பொதுக்கூட்டம் நடை பெறும்.

சுகாதாரப் பிரச்சாரம்

8—4—56 காலை 7-30 மணியள வில், சென்னை—வண்ணையம்பதி இளங்கோ கலைமன்றச் சார்பில், இளங்கோ படிப்பக மாணவ-மாண வியர்களும், மன்ற உறுப்பினர்களும் தோழர்ப.மோகனவேல்தலைமையில் 4-வது வட்டத்தில் ஊர்வலமாகச் சென்று சுகாதாரப் பிரச்சாரம் நடத்துவர்.

இராயபுரம் இலக்கிய மன்றம்

8—4—56 காலை 8-30 மணியள வில், பனைமரத்தொட்டி சிவசுப்பிர மணியசுவாமி கோயில் மண்டபத் தில், இலக்கிய சொற்பொழிவுக் கூட்டம் திரு. எல். ஜே. தலைமை யில் நடைபெறும். 'இலக்கியத்தில் காதல்' எனும் பொருள் பற்றி திரு. ஆர். ஜார்ஜ் பேசுவார்.

பம்பாய் — பாண்டுப்பில் 'நம் நாடு' கிடைக்குமிடம்
உண்ணி பிரதர்ஸ், ஆக்ரா ரோடு, பாண்டுப், பம்பாய்-40.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ் செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 குரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்படுகி றது. ஆசிரியர்: இரா. நெடுஞ் செழியன் எம்.ஏ.